தமிழக அகழாய்வுகள்

# மரக்காணம் (2005 – 2006)

TAMIL NADU STATE DEPT.


பதிப்பாசிரியர் :

முனைவர் **சீதாராம் குருமூர்த்தி,** இ.ஆ.ப.,

முதன்மை ஆணையர்

உதவி பதிப்பாசிரியர்கள்

**கி.ஸ்ரீதரன்**

**இரா. செல்வராஜ்**

**சீ. வசந்தி**



தமிழ்நாடு அரசு

தொல்லியல் துறை

சென்னை – 600 008.

**2006**

முதற்பதிப்பு : 2006

பதிப்பு எண் : 183

பிரதிகள் : 500

9301

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
MADRAS
Acc. No. 11727
Date

உரிமை :

தொல்லியல் துறை

தமிழ்நாடு அரசு

எழும்பூர், சென்னை – 600 008.

விலை : ரூ. 48.00

முன் அட்டை : மரக்காணம் அகழாய்வில் கிடைத்த காசுகள்

பின் அட்டை : மரக்காணம் – பூமீசுவரர் திருக்கோயில் முகப்புத் தோற்றம், கல்வெட்டுத் தோற்றம், அகழாய்வுக்குழி தோற்றம்.

ஒளியச்சு : கங்காராணி கணினியகம்

சென்னை – 14. தொ.பே. 044–2855 3747

அச்சிட்டோர் : சென்னை அச்சக தொழிற்கூட்டுறவு சங்கம் லிட்.,
118, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி : 28446287

முனைவர் **சீதாராம் குருமூர்த்தி,** இ.ஆ.ப.,
*முதன்மை ஆணையர்*

*தொல்லியல் துறை,*
*தமிழ் வளர்ச்சி வளாகம்,*
*எழும்பூர், சென்னை – 600 008.*

# பதிப்புரை

தமிழ்நாட்டின் தொன்மை வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பண்டைய கல்வெட்டுகள், காசுகள், ஓலைச்சுவடிகள் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள் ஆகியவை அடிப்படைச் சான்றுகளாக விளங்குகின்றன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஆண்டுதோறும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைத் தேர்ந்தெடுத்து அகழாய்வினை மேற்கொண்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் என்ற இடத்திலும், திருவள்ளூர் மாவட்டம் பரிக்குளம் என்ற இடத்திலும் 2005 – 06 ஆம் ஆண்டு அகழாய்வு களை இத்துறை மேற்கொண்டது. சங்க காலத்தில் மரக்காணம் துறைமுகப் பட்டினமாக இருந்தது என்பதற்கான இலக்கியக் குறிப்புகள் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில், மரக்காணத்தின் தொன்மை வரலாற்றினை அறிய அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வில் மத்திய கால பானை ஓடுகள், செப்புக் காசுகள் ஆகியவை கிடைத்துள்ளன. இவ் அகழாய்வு பற்றிய அறிக்கை தற்பொழுது நூலாக வெளியிடப்படுகிறது. ஆண்டிப்பட்டி அகழாய்வு அறிக்கையைத் தொடர்ந்து மரக்காணம் அகழாய்வு அறிக்கையும் தமிழில் வெளியிடப்படுகின்றது.

மரக்காணம் அகழாய்வில் பணியாற்றிய அனைத்துத் தொழில்நுட்ப அலுவலர்கள் அனைவரும் போற்றுதலுக்குரியவர் ஆவார்கள். மரக்காணம் அகழாய்வு அறிக்கை தொல்லியல் ஆர்வலர்கள், வரலாற்று அறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என எண்ணுகிறேன்.

**சீதாராம் குருமூர்த்தி**

# முன்னுரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஆண்டுதோறும் தமிழகத்தில் தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை அகழாய்வு செய்து வருகின்றது. இவ்வகழாய்வுகளின்மூலம் பண்டை தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, அன்றாடம் அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் மற்றும் அக்கால சமுதாய நிலை, பொருளாதார நிலை போன்றவற்றை அறியமுடிகிறது.

1961ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்துறை, இதுவரை தமிழகத்தில் 29 இடங்களில் அகழாய்வு மேற்கொண்டுள்ளது. இவ்வாறு மேற்கொண்ட அகழாய்வின் பயன்களும் முடிவுகளும் நூல் வடிவில் வெளியிடப்படுகின்றன. சென்ற ஆண்டு (2004 – 2005) திருவண்ணாமலை மாவட்டம், ஆண்டிப்பட்டி என்ற இடத்திலும், தர்மபுரி மாவட்டம், மோதூர் என்ற இடத்திலும் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அவற்றின் ஆய்வு அறிக்கைகள் அதே ஆண்டில் வெளியிடப்பட்டன.

இவ்வாண்டும் (2005 – 2006) திருவள்ளூர் மாவட்டம், பரிக்குளம் என்ற இடத்திலும், விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் என்ற இடத்திலும் அகழாய்வு மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. இந்திய நடுவண் அரசு தொல்லியல் துறையும் இவ்விடங்களில் அகழாய்வு மேற்கொள்ள அனுமதியளித்தது.

இப்பணி குறித்து மாவட்ட நிர்வாகத்தினருக்கும், ஊர் மக்களுக்கும் விளக்கும் வகையில் 1.03.2006 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மரக்காணம் அகழாய்வு குறித்த ஒரு முன்னோட்ட அறிமுகம் ஒளிப்பட விளக்கங்களுடன் அளிக்கப்பட்டது.

மேலும், அகழாய்வின் தொடர்ச்சியாக மரக்காணம் மற்றும் பரிக்குளம் அகழாய்வுத் தொல்பொருட்கள் கண்காட்சியொன்று, சென்னை தொல்லியல் துறை வளாகத்தில் 12.05.2006 மற்றும் 13.05.2006 ஆகிய இருநாள்கள் நடத்தப்பட்டது. இக்கண்காட்சியைப் பல பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர், தொல்லியல் அறிஞர்கள், ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டு பயனடைந்தனர். இந்த அகழாய்வுப் பணியிலும், தொடர்ந்து கண்காட்சியிலும் ஆர்வத்துடன் பணியாற்றிய துறை தொழில்நுட்ப அலுவலர்கள் பாராட்டுக்குரியோர். சென்ற ஆண்டு ஆண்டிப்பட்டி அகழாய்வு அறிக்கை தமிழில் வெளிவந்ததைத் தொடர்ந்து இந்நூலும் தமிழில் வெளிவருகின்றது. தமிழ் கூறும் நல்லுலகத் திற்குப் பயன் உள்ளதாகவும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் இருக்கும் என நம்புகிறேன்.

15.06.2006
சென்னை – 8.

தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையர்

# உள்ளடக்கம்


| வ. எண். | தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|
| | பதிப்புரை | ... | |
| | முன்னுரை | ... | |
| 1. | மரக்காணம் இருப்பிடம் மற்றும் வரலாறு | ... | 1 |
| 2. | அகழாய்வுக் குழிகள் | ... | 7 |
| 3. | தொல்பொருட்கள் | ... | 15 |
| 4. | காலப் பாகுபாடு | ... | 27 |
| 5. | பானை ஓடுகள் | ... | 29 |
| 6. | முடிவுரை | ... | 35 |

**அட்டவணை**

1. தொல்பொருட்கள் ... 37
2. சுடுமண் பொருட்கள் ... 38

**வரைபடங்கள்**

பாள நிலை ... 39

**நிழற்படங்கள்**

# தமிழக அகழாய்வுகள்
# மரக்காணம் (2005 – 2006)

## 1. இருப்பிடம் மற்றும் வரலாறு

மரக்காணம், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் கிழக்கு அட்ச ரேகை 13°04 மற்றும் வடக்கு தீர்க்க ரேகை 80°15'க்கு இடையில் அமைந்துள்ளது. திண்டிவனத்திலிருந்து 35 கி.மீ தொலைவில் வங்கக் கடலை ஒட்டி கிழக்கு கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள இவ்வூர் 2000 ஆண்டுகளுக்கு முன்பே வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகத் திகழ்ந்துள்ளது.

**விழுப்புரம் மாவட்டம் புவியியல் அமைப்பு :**

விழுப்புரம் மாவட்டத்தின் புவியியல் அமைப்பு தொல்லியல் ஆய்வுக்குத் துணை புரிவதாக உள்ளது. விழுப்புரத்தில் கிரேனைட் (Granite), சயனைட் (Syenite), சார்னகைகட் (Charnockite) மற்றும் அன்கிளாசிபைட் நைஸ் அதாவது பகுக்கப்படாத (Unclassified Gneisse) என்ற பாறை வகைகள் காணப்படுகின்றன. இப்பகுதியில் அதிக அளவில் உப்பங்கழிகள் (Lagoons) உள்ளன. மேலும், இப்பகுதியில் பழுப்பு வெள்ளை நிற சிலிக்கா மணல் (Silica Sand) மற்றும் கிளிஞ்சல் பாறைகள் (Shell limestones) கிடைக்கின்றன. 1 முதல் 1.5 மீட்டர் மணல் மேடுகள் ஆங்காங்கே காணப்படு கின்றன. இப்படிவுப் பாறையின் ரிசர்வ் அளவு 30,000 மண் அளவு ஆகும்.

வரலாறு :

சங்க காலத்தில் தொண்டை நாட்டில் முக்கிய துறைமுகப் பட்டினமாக இவ்வூர் இருந்துள்ளது. தற்பொழுது மரக்காணம் என வழங்கப்பட்டு வரும் இவ்வூர் மரக்கானம், எனவும் அழைக்கப் படுகிறது. கானம் என்பது கடலோரப் பகுதியைக் குறிக்கும். கடலோரத்தில் மரங்கள் அடர்ந்த பகுதியில் இவ்வூர் உள்ளதால் மரக்கானம் எனவும் வழங்கப்பட்டிருக்கலாம்.

மரக்காணத்தின் வரலாறு சங்க காலம்தொட்டு, அதாவது கி.மு. 300 முதல் தொடங்குகிறது. சங்ககாலத்தில், தொண்டை நாட்டில் முக்கியத் துறைமுகப் பட்டினமாக இருந்தது எயிற்பட்டினம். சில அறிஞர்கள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எயிற்பட்டினமும் மரக்காணமும் ஒரே இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். மேலும், பெரிப்ளுஸ் என்னும் கிரேக்க நூலில் ‘சோபட்மா’ என்ற இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடம் ஒரு வியாபாரத்தலமாக இருந்ததாகும், காமரா எனப் படும் இடத்திற்கு அடுத்தும் புதுக்கேயை அடுத்தும் இவ்வூர் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே நூலில் சோபட்மா என்பது ‘சூ–பட்டனா’ அதாவது அழகிய நகரம் (Fair town) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்நகரம் தற்போதைய சென்னை நகருக்கு (வடக்கில் 80°19 கிழக்கில் 13°4’ ) தொலைவில் இருக்கக் கூடும் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

சங்கத் தொகை நூல்களாகிய ‘பத்துப்பாட்டில்’ ஒன்று சிறுபாணாற்றுப்படை ஆகும். இதில் இப்பகுதி ஒய்மா நாடு என்று அழைக்கப்பட்டிருந்தது என்றும் இவ்விலக்கியம் ஓய்மா நாட்டை நல்லியக்கோடன் என்ற அரசன் ஆண்டு வந்ததாகவும் அவனிடம் பரிசில் பெற்று மீண்டு வந்த சிறுபாணன் ஒருவன், வரிய

மற்றொரு சிறுபாணனைக் கண்டு அவனை நல்லியக்கோடன் பால் ஆற்றுப்படுத்துவதாகவும் பாடப்பட்டதாகும். இப்பாட்டு 269 அடிகளைக் கொண்டது. இதனைப் பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்ற புலவர் ஆவார். மரக்காணத்திலிருந்து சுமார் 12 கி.மீ. தொலைவில் வடக்கே இடைக்கழி நாடு அமைந்துள்ளது. இந்நூலில் ஓய்மாநாட்டுக் கடற்கரையின் எழில், முல்லை நிலம், மருதநிலம் ஆகியவை பற்றிய செய்திகளும், இந்நாட்டில் அமைந்திருந்த ஊர்களான எயிற்பட்டினம், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை ஆகியவை பற்றிய குறிப்புகளும், மன்னனின் கொடைத் தன்மையும், பிறபண்புகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

எயிற்பட்டினத்தைப் பற்றி,

**"கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்**
**பாடல் சான்ற நெய்தல் நெடுவி"**

**"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய**
**பனி நீர்ப் படுவிற் பட்டினம் படரின்**
**ஒழுங்குநிலை ஒட்டகந் துயில்மடிந் தன்ன**
**வீங்குதிரை கொணர்ந்த விரைமாவிற்றே"**

என்று சிறுபாணாற்றுப் படை குறிப்பிடுகிறது.

இப்பாடல் வரிகளின் மூலம் விரைமரம் (அகில் கட்டை) இத்துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டது என்ற செய்தியும், கடலில் கொண்டுவரப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளதால், இவை சாவக நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கலாம் என மயிலை சீனி. வேங்கடசாமி கருதுகின்றார். இதே பாடலில், இந்த அகில் மரக்கட்டைகள் படுத்துத் தூங்கும் ஒட்டகம் போன்ற வடிவில் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரக்காணத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பூமீசுவரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இதில் 21 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முதலாம் இராஜராஜசோழன், முதலாம் இராசேந்திரசோழன், முதலாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன், விருப்பண்ண உடையார், நரசிங்கராயர், மல்லிகார்ச்சுனராயர், இம்மடி அச்சுததேவ மகாராயர் ஆகிய மன்னர்கள் கால கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன. இக்கோயில் கல்வெட்டுகள் மூலம் மரக்காணத்தின் தொன்மை வரலாற்றினை அறிய முடிகின்றது. இராசராசசோழன் கல்வெட்டுகளில் (கி.பி. 985 - 1014) ‘இப்பகுதி ஒய்மா நாட்டு பட்டின நாட்டுப் பட்டினமான மனக்காணம்’ என்றும் ‘ஒய்மாநாட்டு பட்டின நாட்டு தேவதானம்’ என்றும் குறிக்கப்படுகிறது. இராசேந்திர சோழன் கல்வெட்டுகளில் (கி.பி. 1012 - 1032) ஒய்மாநாட்டுப் பட்டின நாட்டுப் பட்டினம்’ எனவும் அழைக்கப்படுகிறது. முதலாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் ‘எயிற்பட்டினம்’ என்றே இவ்வூர் குறிக்கப்படுகிறது. விஜய நகர மன்னர்கள் காலத்தில் தான் இவ்வூர் மரக்காணம் என்று அழைக்கப்பட்டது.

முதலாம் இராசராச சோழன் காலத்தில் ‘மனக்காணமான இராசராசப் பேரளம்’ என்று இராஜராஜன் பெயரால் வழங்கப்பட்ட உப்பளத்திலிருந்து வரும் வருவாயைக் கொண்டு விளக்கு எரிக்க தானம் அளிக்கப்பட்டுள்ளது. இன்றும் மரக்காணத்தில் உப்பு உற்பத்தி செய்யும் தொழிலுக்கு அடிப்படையான உப்பளங்கள் காணப்படுகின்றன. பூமீசுவரர் கோயிலுக்கு வடக்கே உப்பளங்கள் உள்ளன.

மேலும் மரக்காணம் பூமீசுவரர் கோயிலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் கடற்கரை அமைந்துள்ளது. கடல் நீரை உள்ளே

கொண்டு வரும், கழிமுகமும் இருக்கிறது. இதனை ஒட்டி மணல்மேடுகள் பல அமைந்துள்ளன. கரிப்பாளையம், உச்சிமேடு, கச்சி மேடு, அழகன் குப்பம், தாழைக்காடு, வசவன் குப்பம், கைப்பாணி, கைப்பாணிக்குப்பம், யக்கியர் குப்பம், நாறல்வாயன் குப்பம் போன்ற சிறு சிறு ஊர்கள் காணப்படுகின்றன. இம்மணல்மேடுகளில் பண்டைய காசுகள், பானை ஓடுகள் போன்றவை கிடைத்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

வரலாற்றுச் சான்றுகளின் மூலம் மிகவும் குறைந்த காலத்திற்கே இத்துறைமுகம் பயன்பட்டிருக்க வேண்டும் என அறிய முடிகின்றது. இயற்கையின் சீற்றத்தினால் கடற்கரைக்கு அருகே இருந்த துறைமுகம் அழிந்து போயிருக்கலாம். கடற்கரைக்கு அருகே காணப்படும் உயர்ந்த மணற்மேடுகளே இதற்கு அடையாளமாக விளங்குகின்றன.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்**


1. Schoff H. wiffred Translated and annoted The Periplus of Erythraean Sea.
2. Motichandra - Trade and Trade routes in Ancient India.
3. Prakash caran Prasad - Foreign trade and commerce in Ancient India.
4. Warmington E.H - The commerce between the Roman Empire and India.
5. Desikar S.S. Identification of sopatna - Journal of mythic society vol XXI p129-140
6. Cassol L. The Periplus mario Ery thraei - Text with introduction, translation and commentary, 1989 Princeton University press, Princeton.
7. Nilakanta Sastri, K.A.,- Foreign Notices of South India, p59.
8. Sridhar T.S. - Modur Excavation, 2005
9. Sridhar T.S. - ஆண்டிப்பட்டி அகழாய்வு , 2005

10. Annual Report on Indian Epigraphy - 1919.

11. Mahalingam, T.V. Topographical list of Inscriptions in Tamil Nadu and Kerala 1961 Vol - II

12. Balasubramaniam, S.R. Middle chola temples 1971.

13. இராசமாணிக்கனார் மா. பத்துப்பாட்டு ஆராய்ச்சி, 1970.

14. தாமோதரன் கு., விழுப்புரம் மாவட்ட வரலாறு, 1994.

15. சீனிவேங்கடசாமி மயிலை - பழங்காலத் தமிழர் வாணிகம், 1991

16. வசந்தகல்யாணி அர. தமிழகக் கோயில் - கல்வெட்டு-காசு, 1994.

17. சீனி வேங்கடசாமி மயிலை - சிறுபாணன் சென்ற பெருவழி - Tamil culture vol IX,1961.

18. நடன. காசிநாதன், சந்திரமூர்த்தி மா. (பதிப்பாசிரியர்கள்) - சமணத்தடயம் - விழுப்புரம் மாவட்டத்தில் மறைந்த சமணப்பள்ளிகள்,

19. சந்திரமூர்த்தி மா., தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி -1.

20. சுப்ரமணியன் ச., மரக்காணம் - அருள்மிகு பூமீசுவரர் கோயில் - கல்வெட்டு நிறுவன பயிற்சி மாணவர் ஆய்வேடு - 1997-1998.

# 2. அகழாய்வுக் குழிகள்

மரக்காணத்தில் மொத்தம் ஐந்து ஆய்வுக் குழிகள் அகழும் பணி மேற்கொள்ளப்பட்டன.

அகழாய்வுக் குழி எண் 1 : இவ் அகழாய்வுக் குழியானது மரக்காணம் - திண்டிவனம் சாலையில் மரக்காணத்திலிருந்து 6 கி.மீ. மேற்கில், கந்தாடு பிரிவிலிருந்து மேற்கில் 1 கி.மீ. தொலைவினில் அமைக்கப்பட்டது. கந்தாடு - நடுக்குப்பம் செல்லும் சாலையில் உள்ள "பச்சை பைத்தான் கொல்லை" என்ற ஊருக்கு வடக்கில் சுமார் ½ கி.மீ. தொலைவில் உள்ள புளியந்தோப்பில் இக்குழி அமைக்கப்பட்டது.

பச்சை பைத்தான் கொல்லையில் உள்ள கிராம தேவதையின் கோயிலான ஐயனார் கோயிலுக்குத் தெற்கில் சுமார் 20' தூரத்தில் முதலாம் அகழாய்வுக் குழி அமைக்கப்பட்டது. அகழாய்வுக் குழிகள் MRK - என பெயரிடப்பட்டது. MRK–1ன் கிழக்குப் பகுதியின் அருகிலேயே கவுன்சிலர் அழகேசன் என்பவருக்குச் சொந்தமான நிலம் உள்ளது. MRK - 1 ன் அமைப்பானது, கிழக்கு, மேற்காக அமைக்கப்பட்டது. இக் குழியின் நீளம் மற்றும் அகலம் முறையே 5 X 5 மீட்டர் ஆகும். வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் 50 செ.மீ அகலத்தில் நடை பாதையை (Baulk line) விட்டு விட்டு, 5 X 4 மீட்டர் நீளம் மற்றும் அகலம் உள்ளவாறு அகழாய்வுக் குழியை அகழும் பணியை மேற்கொள்ளப்பட்டது. இவ் அகழாய்வுக் குழி 115 செ.மீ ஆழம் வரை அகழப்பட்டது. குழியில் மேல் மட்ட மண் (Humus) மற்றும் இரண்டு பாள நிலைகள் (layers) காணப் படுகின்றன. மேல் மட்ட மண்ணுக்கு அடுத்து காணப்படும்

முதலாம் பாள நிலையில் (layer-1) மண்ணானது சிறிது சிவப்பு நிறத்திலும் (light Red) மற்றும் கடினத் தன்மையோடும் (Compact) காணப்படுகிறது. முதலாம் பாள நிலையை அடுத்து இரண்டாம் பாள நிலை காணப்படுகிறது. இப்பாள நிலையும் சிறிது சிவப்பு நிற வண்ணத்திலும், சிறிது கடினத் தன்மையோடு (Hard or Campact) காணப்படுகிறது. இதையடுத்து கன்னி மண் (Natural soil) காணப்படுகிறது, இம்மண்ணானது மிகவும் கடினத் தன்மையோடு இருக்கிறது.

**செங்கற் சுவர் (BRICK WALL):**

அகழாய்வுக் குழி எண் 1ல் மேல்மட்ட மண்ணில் (Humus) குழியின் தெற்குப் பகுதியில் III' - V' என்னும் ஆப்புகளுக்கு (Pegs) இடையில் இச்செங்கல் சுவர் அமைந்துள்ளது. இச்சுவரானது தெற்குப் பகுதியிலிருந்து குறுக்கு வாட்டத்தில் மேற்கு திசையை நோக்கி காணப்படுகிறது.

இச்செங்கல் சுவரின் ஒரு முனைப் பகுதியானது III'யிலிருந்து கிழக்காக 200 செ.மீ தூரத்திலும், மற்றொரு கடை முனைப் பகுதியானது தெற்கிலிருந்து வடக்காக 140 செ.மீ தூரத்திலும் காணப்படுகிறது. இச்சுவரில் உடைந்த 15 செங்கற்கள் காணப்படு கின்றன. இச்சுவர் பகுதியானது இரண்டு செங்கற்களுக்கு இடையில் இணைக்கும் (Binding material) பொருளாக, களி மண்ணையே பயன் படுத்தியதை தெளிவாக அறிய முடிகிறது. இச்சுவரின் மையப் பகுதியில் 30 செ.மீ. அகலமும், தெற்குப் பகுதி, யில் 19 செ.மீ. அகலமும் உடையதாகக் காணப்படுகிறது. மேற்குப் பகுதியில் உள்ள மற்றொரு சுவரின் முனைப் பகுதியின் அகலம் 14 செ.மீ ஆகும். இச்செங்கல் சுவரின் உட்பகுதியின், மேல் மட்டத்தில் ஒரு தரைப் பகுதி (Floor) காணப்படுகிறது. இத் தரைப்

பகுதியானது உடைந்த துண்டு செங்கற்களால் பாவப் பட்டுள்ளது. இச்செங்கல் சுவரின் முதல் வரிசை மட்டுமே தற்போது காணப்படுகின்றது. கல் வரிசை மட்டுமே காணப்படுகிறது. இச்செங்கல் சுவரின் அஸ்திவாரமானது (Basement) ஆழமாகவும் பலமாகவும் இல்லை. இச்செங்கல் சுவரானது சாதாரண தொட்டியாகவோ அல்லது வேறு உபயோகத்திற்காகவோ பயன் படுத்தப் பட்டிருக்கக் கூடும்.

இவ் அகழாய்வுக் குழியில் சொர சொரப்பான சிவப்பு நிறப் பானை ஓடுகளும் (Coarse Red Ware) வெண்மை நிறத்தினால் ஆன பீங்கான் ஓடு (Porcelain) ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன.

**அகழாய்வுக் குழி எண் 2:**

இவ் அகழாய்வுக் குழியானது, அகழாய்வுக் குழி எண் 1 லிருந்து வட மேற்கில் 22.45 மீட்டர் தொலைவினில் அமைக்கப்பட்டது. இவ் அகழாய்வுக் குழியும், முதலாம் அகழாய்வுக் குழியைப் போன்று, கிழக்கு - மேற்காக அமைக்கப்பட்டது. இவ் அகழாய்வுக் குழியின் நீளம் மற்றும் அகலம் முறையே 5 X 5 மீட்டர் ஆகும், ஆயினும் வடக்கு மற்றும் தெற்கில் நடைபாதையை (baulk line) 50 செ.மீ அகலத்தில் விட்டு விட்டு, மீதி உள்ள இடத்திலேயே அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதாவது அகழாய்வுச் செய்யும் இடத்தின் நீளம் மற்றும் அகலம் முறையே 5X4 மீட்டர் ஆகும். இவ் அகழாய்வுக் குழியை 110 செ.மீ ஆழம் வரை அகழும் பணியை மேற்கொண்டதில் மேல்மண் (Humus) ஒரே ஒரு பாள நிலையும், இதற்கு அடுத்து கன்னி மண்ணும் (Natural soil) காணப்படுகின்றன. மேல் மட்ட மண்ணானது சிறிது கரிய (Black colour) நிறத்திலும், சிறிது மிருதுவானதாகவும் (Slightly loose) காணப்படுகின்றன. இதற்கு அடுத்து காணப்படும் முதலாம் பாள நிலை மண்ணானது

சிறிது சிவப்பு நிறத்திலும் (Light Red) கடினத் தன்மையோடும் (Compact earth) காணப்படுகிறது. இம் மண்ணையடுத்து கன்னி மண் காணப்படுகிறது. இந்நிலையில் இம் மண்ணானது அடர் பழுப்பு நிறத்திலும் (Dark brown colour) மிகவும் கடினத் தன்மையோடும் (Compact) காணப்படுகிறது.

இவ் அகழாய்வுக் குழியில் சொர சொரப்பான சிவப்பு நிற பானை ஒடுகளும் (Coarse red ware), சுடுமண் கெண்டியின் உடைந்த மூக்குப் (Spout) பகுதி ஒன்றும், சுடுமண்ணால் ஆன மூடி (lid) ஒன்றும், உடைந்த சுடுமண்ணால் ஆன கால் பகுதி ஒன்றும், (Terracotta leg portion) சுடுமண்ணால் ஆன அடிப்பான் (Dabber) ஒன்றும், வெண்ணிற பீங்கான் துண்டு (Porcelain) ஒன்றுமாக மொத்தம் ஆறு தொல் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

**அகழாய்வுக் குழி எண் 3 :**

இவ் அகழாய்வுக் குழியானது சென்னை - பாண்டி செல்லும் கிழக்குச் கடற்கரைச் சாலையில் உள்ள பூமீசுவர்ர் கோயிலுக்கு வெகு அருகாமையில் தென்மேற்குப் புறத்தில் அமைக்கப்பட்டது. குறிப்பாக இக்குழி கிழக்குக் கடற்கரை சாலையிலிருந்து மேற்கில் 300 மீட்டர் தூரத்திலும், மரக்காணம் செல்லும் சாலையின் தெற்கிலிருந்து வடக்காக 10 மீட்டர் தொலைவினில் அமைக்கப் பட்டது. இவ் அகழாய்வுக் குழியானது கிழக்கு - மேற்கு திசையினில் உள்ளவாறு அமைக்கப்பட்டது. இவ் அகழாய்வுக் குழியின் நீளம் மற்றும் அகலம் முறையே 5 x 5 மீட்டர் ஆகும். இவ் அகழாய்வுக் குழியின் இரு புறங்களிலும் அதாவது வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் 50 செ.மீ அகலத்தில் நடைபாதையை விட்டு விட்டு,மீதி உள்ள இடத்தில், அதாவது 5 x 4 மீட்டர் நீளம் மற்றும் அகலம் உள்ளவாறு அகழாய்வுக் குழியை அகழும் பணியை

மேற்கொள்ளப்பட்டது. இவ் அகழாய்வுக் குழியை 140 செ.மீ. ஆழம் வரை அகழப்பட்டதில், மேல்மட்ட மண் (Humus) இதற்கு அடுத்ததாக சிவப்பு நிறத்தினால் ஆன முறம்பு மண் ஒரு துணை பாள நிலையாகத் தெற்குப் பகுதியில் (Sub layer) காணப்படுகிறது. இதையடுத்து முதலாம் பாள நிலையும் (layer 1) அடுத்து இரண்டாம் பாள நிலையும் (Layer 2) அடுத்து மூன்றாம் பாள நிலையும், கடைசியாகக் கன்னி மண்ணும் (Natural Soil) காணப்படுகிறது. மேல் மட்ட மண்ணானது மிகவும் மிருதுவானதாகவும் சாம்பல் நிற வண்ணத்திலும் காணப்படுகிறது. முதலாம் பாள நிலையில் உள்ள மண்ணானது சிறிது மிருதுவானதாகவும் (Slightly loose) சிவப்பு நிற வண்ணமுமாக காணப்படுகிறது. இரண்டாம் பாள நிலையில் உள்ள மண்ணானது சிறிது மிருதுவானதாகவும், பழுப்பு நிறத்திலுமாக காணப்படுகிறது. இதையடுத்து, மூன்றாம் பாள நிலையில் உள்ள மண்ணானது மிகவும் மிருதுவானதாகவும் (loose earth) அழுக்கான ஆற்று மணலின் (Dirty - River sand) நிறத்தில் காணப்படுகிறது, இதையடுத்து காணப்படும் கன்னி மண்ணானது ஆற்று மணலாகவே (River Sand) காணப்படுகிறது.

இவ் அகழாய்வுக் குழியின் தெற்குப் பகுதியானது சற்று உயர்ந்தும், வடக்குப் பகுதியானது சற்று தாழ்ந்தும் காணப்படுகிறது. தெற்குப் பகுதியில் காணப்படும் மேல் மட்ட மண்ணானது மேற்கு மற்றும் வடக்கும் பகுதிகளில் உள்ள பக்க சுவர்களில் காணப்படவில்லை (Complete absence of Humus in Northern side) இப்பகுதிகளில் இருந்த மேல் மட்ட மண்ணும் மற்றும் முதலாம் பாள நிலைக்குரிய மண்ணும் சிதைந்து விட்ட காரணத்தினால் வடக்குப் பகுதியானது சற்று தாழ்ந்து காணப்படுகிறது. இக்குழியிலும் சொர சொரப்பான சிவப்பு நிற ஓடுகளும் (Coarse Red ware) சோழர்கள் காலத்தைக் சார்ந்த 'L' வடிவ

கூரை ஓடுகளும் (Roof tiles) சுடுமண்ணால் ஆன உடைந்து கெண்டியின் மூக்குப் பகுதிகளும் (T.C. Spouts) மற்றும் செங்கல் துண்டு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

**அகழாய்வுக் குழி எண் 4 :**

இவ் அகழாய்வுக் குழி, கிழக்கு கடற்கரைச் சாலையிலிருந்து கிழக்கில் சுமார் ½ கி.மீ தொலைவினில், பெரியார் கூட்டுறவு தேங்காய் நார் தொழிற்சாலைக்கு பின் புறத்தில் உள்ள ஒரு மணல் மேட்டில் இவ் அகழாய்வுக் குழி அமைக்கப்பட்டது. இப்பகுதியை உள்ளூர் மக்கள் ''முக்குருணிக் காடு'' என்றும், முந்திரிக்காடு என்றும் அழைக்கிறார்கள். இப்பகுதி கடற்கரைக்கு அருகில் இருப்பதனால், இவ்விடம் ஒரு வணிகத் தலமாக (Trade City) ஆக இருக்க வாய்ப்பு இருக்கலாம் என்ற காரணத்தினால், அகழாய்வுக் குழி இப்பகுதியில் தேர்வு செய்யப்பட்டது. மேலும் சுமார் 30 ஆண்டுகட்கு முன்பு இப்பகுதியில் பூசை செய்வதற்கு தேவையான பாத்திரங்களும் மற்றும் பெரிய பெரிய பாத்திரங்களும், புதையலாக கண்டெடுத்ததை உள்ளூர் மக்களின் வாயிலாக அறிய முடிந்ததால் இம்முந்திரிக் காட்டில் அகழாய்வுக் குழி எண் 4 ல் அகழாய்வு செய்யும் பணியை மேற்கொள்ளப்பட்டது. இவ் அகழாய்வுக் குழியானது, கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டது. இவ் அகழாய்வுக் குழியின் நீளம் மற்றும் அகலம் முறையே 5x5 மீட்டர்கள் ஆகும். வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் 50 செ.மீ. அகலத்தில் நடைபாதையை (Baulk line) விட்டு மீதி உள்ள இடத்தில் அகழாய்வுக் குழி அமைக்கப்பட்டது. அகழாய்வு பணி செய்யும் இடத்தின் நீளம் மற்றும் அகலம் முறையே 5x4 மீட்டர்கள் ஆகும். இவ் அகழாய்வுக் குழியில் 70 செ.மீ. ஆழம் வரை அகழும் பணி மேற்கொள்ளப்பட்டது. இக்குழியில் மொத்தம் இரண்டு பாள

நிலைகள் காணப்பட்டன. மேல் மட்ட மண் (Humus)ணை அடுத்து முதலாம் பாளநிலை (layer 1)யும் அதனை அடுத்து இரண்டாம் பாள நிலையும் (layer 2) மற்றும் கடைசியாக கன்னி மண்ணும் காணப்படுகின்றன. இவ் ஆய்வுக் குழியில் மேல் மட்ட மண் முதல் கன்னி மண் வரையில் (Natural soil) ஆற்று மணலாகவே காணப்படுகிறது. இவ் ஆய்வுக் குழியில் மிக சொற்ப அளவில் சொர சொரப்பான சிவப்பு நிற ஓடுகள் கிடைக்கின்றன. இவ்அகழாய்வுக் குழியில் தொல்பொருட்கள் ஏதும் கிடைக்கவில்லை, என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

**அகழாய்வுக் குழி எண் 5 :**

அகழாய்வுக் குழி எண் 5 ஆனது அகழாய்வுக் குழி எண் 3 லிருந்து மேற்கில் 2 மீட்டர் தொலைவினில் உள்ள சிறிய மண் மேட்டில், இவ் அகழாய்வுக் குழி அமைக்கப்பட்டது. கிழக்கு கடற்கரைச் சாலையிலிருந்து, மரக்காணம் ஊர் செல்லும் பாதையில் பாதையிலிருந்து வடக்கில் 6 மீட்டர் தூரத்தில் இக்குழி அமைக்கப் பட்டது. அகழாய்வுக் குழி எண் 3 யைப் போலவே தெற்குப் பகுதி சிறிது மேடானப் பகுதியானதாகவும், வடக்குப் பகுதியானது சற்று தாழ்வான பகுதியாகவும் காணப்படுகிறது. இதன் காரணமாகவே வடக்குப் பகுதியில் உள்ள பக்க சுவர்களில் மேல் மட்ட மண் மற்றும் முதலாம் பாள நிலை மண் இன்றி சற்று தாழ்ந்து காணப்படுகிறது.

இவ் அகழாய்வுக் குழியும் கிழக்கு மேற்கு திசையினில் உள்ளவாறு அமைக்கப்பட்டது. இவ் அகழாய்வுக் குழியின் மொத்த நீளம் மற்றும் அகலம் முறையே 5x5மீட்டர்கள் ஆகும். ஆனால் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் 50 செ.மீ அகலத்தில் நடை பாதையை விட்டு மீதிப் பகுதியில் அதாவது அகழாய்வு செய்யும்

இடத்தின் நீளம் மற்றும் அகலம் முறையே 5x4 மீட்டர்கள் ஆகும். இவ் அகழாய்வுக் குழியில் 135 செ.மீ ஆழம் வரை அகழும் பணியை மேற் கொண்டதில் மூன்று பாள நிலைகள் (three layers) உள்ளன. இவ் அகழாய்வுக் குழியின் மேல் மட்ட மண்ணானது சிறிது மிருதுவானதாகவும், சாம்பல் நிற வண்ணத்திலும் காணப்படுகிறது. முதலாம் பாள நிலை சிறிது மிருதுவாகவும், சிவப்பு வண்ணத்திலும் காணப்படுகிறது. இரண்டாம் பாள நிலையில் உள்ள மண்ணானது சிறிது மிருதுவானதாகவும் பழுப்பு நிறத்திலும் காணப்படுகிறது. இதையடுத்து மூன்றாம் பாள நிலையில் உள்ள மண்ணானது மிகவும் அழுக்கான ஆற்று மணலின் நிறத்தில் காணப்படுகின்றது. இதையடுத்து காணப்படும் கன்னி மண்ணானது ஆற்று மணலாகவே காணப்படுகிறது. இக்குழியில் மொத்தம் 14 தொல்பொருட்கள் கிடைக்கப்பெற்றன. இதில் சுடுமண்ணாலான 5 கெண்டி பகுதிகளும், ஒரு சிறிய சில்லு ஒன்றும், இரண்டு சுடுமண்ணாலான உடைந்த புகைப்பான்களும் (Smoking Pipes) சுடுமண்ணாலான பணியாரச் சட்டி ஒன்றும், தாங்கி ஒன்றும் (Ring On stand) அடிப்பான் (Dabber) ஒன்றும் கண்டெடுக்கப் பட்டன.

# 3. தொல் பொருட்கள் (ANTIQUITIES)

மரக்காணம் அகழாய்வின் அகழாய்வு செய்யப்பட்ட 5 ஆய்வுக் குழிகளிலும் மொத்தம் 51 தொல் பொருட்கள் கண்டெடுக்கப் பட்டன. இதில் 12 நாணயங்கள், 27 சுடுமண்ணால் ஆன பொருட்கள் (T.C object) மற்றும் 12 இதர தொல் பொருட்கள் ஆகும்.

I. **சுடுமண் பொருட்கள்**

மரக்காணம் அகழாய்வில் சுடுமண்ணால் ஆன 27 தொல் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. (பார்க்க : அட்டவணை எண்.–1) இதில் 14 உடைந்த கெண்டியின் மூக்குப் பகுதிகளும் (T.C Spouts), 2 புகைப்பானும் (Smoking pipes), 1 சில்லும், ஒரு தாங்கியும், சதுரங்க காய் ஒன்றும், உடைந்த பணியாரச் சட்டி ஒன்றும், மூடி ஒன்றும், உடைந்த கால் பகுதி (leg portion) ஒன்றும் மற்றும் கூரை ஒடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன.

(a) **கெண்டியின் மூக்குப் பகுதி :** (T.C. Spouts) :

மரக்காணம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட 27 சுடுமண் பொருட்களில் 14 கெண்டிப் பகுதிகளாகும். சுடுமண்ணால் ஆன கெண்டியின் உடைந்த மூக்குப் பகுதிகள் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டன. இவைகள் பல்வேறு அளவுகளில் காணப்படுகின்றன. ஒரு மூக்குப் பகுதியானது நெல்லிக்காய் போன்ற (Amalaka shape) வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கெண்டிகள் அனைத்துமே இரண்டாம் கால கட்டத்திற்குரிய பாள நிலையிலேயே கிடைக்கின்றன. மேலும், கண்டெடுக்கப்பட்ட

உடைந்த கெண்டியின் மூக்குப் பகுதிகள் இரண்டாம் அகழாய்வு குழி, மூன்றாம் குழி மற்றும் ஐந்தாம் ஆய்வுக் குழிகளில் மட்டுமே கிடைக்கின்றன. இவ்வகையான கெண்டிகள் தமிழகத்தில் இதுவரையில் நடைபெற்ற அனைத்து அகழாய்வுகளிலும் கிடைத்துள்ளன. குறிப்பாக, தேரிருவேலி, போளுவாம்பட்டி, கரூர், கொடுமணல், கங்கைகொண்ட சோழபுரம், ஆண்டிப்பட்டி மற்றும் மாங்குளம் போன்ற அகழாய்வுகளில் பரவலாக கிடைக்கின்றன. மரக்காணத்தில் கிடைக்கும் கெண்டிகள் அதிகபட்சமாக குழி எண் 3 மற்றும் 5 இல் இவை கிடைத்துள்ளன. அகழாய்வுக்கு குழி எண் 4ல் இவை ஒன்றுகூட கிடைக்கவில்லை, ஆதலால் சிவன் கோயிலின் மேற்குப் பகுதியிலேயே அதிகமாக கிடைப்பதால் இப்பகுதியிலேயேதான் மக்கள் வாழ்ந்த வாழ்விடப் பகுதி (Habitation site) ஆக இருத்தல் வேண்டும்.

(b) **புகைப்பான்** (Smoking Pipe) :

மரக்காணம் அகழாய்வில் இரண்டு புகைப்பான்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவையிரண்டும் சுடுமண்ணால் ஆன உடைந்த புகைப்பான்கள் ஆகும், ஒரு புகைப்பான் அழகிய வேலைப்பாடுகளுடன் (Decorated) காணப்படுகிறது. இவை இரண்டும் அகழாய்வுக் குழி எண் 5ல் மட்டுமே 35 செ.மீ. மற்றும் 55 செ.மீ ஆழத்தில் முதலாம் பாளநிலைகளில் இரண்டாம் காலகட்டத்தினைச் சார்ந்த மண் அடுக்குகளில் கிடைக்கின்றன. தமிழகத்தில் இதுவரையில் நடைபெற்ற பல அகழாய்வுகளில் குழிகளில் இவ்வகையான புகைப்பான்கள் பரவலாக கிடைக்கின்றன. போளுவாம்பட்டி, கரூர், கொடுமணல், திருக்கோவிலூர் மற்றும் சேந்தமங்கலம் போன்ற இடங்களில் அதிகமான அளவில் புகைப்பான்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மரக்காணம்

அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட 51 தொல் பொருட்களில் இதன் அளவு 4 விழுக்காடுகள் ஆகும்.

(c) **அடிப்பான்** (Dabber) :

மரக்காணம் அகழாய்வில் சுடுமண்ணால் ஆன அடிப்பான் ஒன்று கிடைத்துள்ளது. அகழாய்வுக் குழி எண் 2ல் 51 செ.மீ. ஆழத்தில் இரண்டாம் கால் கட்டத்திற்குரிய பாள நிலையில் கிடைக்கின்றன. சுடுமண்ணால் ஆன இத்தொல்பொருள் வேட்கோவர்கள் (potter or pot maker) புதிய மட்பண்டங்களை செய்யும் சமயத்தில் மேடு பள்ளம் இல்லாமல் சமமாகப் பானைகளைச் செய்ய இதனைப் பயன்படுத்தியிருக்கக் கூடும். இவ்வகையான அடிப்பான்கள் தமிழ்நாட்டில் பல அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாகப் போளுவாம்பட்டி, அழகரை மற்றும் அழகன்குளம் ஆகிய இடங்களில் கிடைத் துள்ளதை அவ்விடங்களில் நடைபெற்ற அகழாய்வுகள் மூலம் அறிய முடிகிறது.

(d) **சில்லுகள் :** (Hip - Hops)

தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட அனைத்து ஆய்வு களிலும், பொதுவாகக் கிடைக்கும் தொல்பொருள் சில்லுகளே ஆகும். சில்லுகள் உடைந்த மட்பாண்டங்களிலிருந்து சிறு துண்டுகளைத் தேர்ந்தெடுத்து தேவையான உருவத்தில் அல்லது வடிவினில் கற்களில் தேய்த்து (Grinding) உருவாக்கப் படுகின்றன. இவ்வகையான சில்லுகள் சொரசொரப்பான சிவப்பு நிற ஓடுகளிலும் (Corse Red ware) மற்றும் தொன்மையான கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களிலும் (Black - and - Red ware) செய்யப் பட்டவைகளாகும். பொதுவாக அகழாய்வுக் குழிகளில் சில்லுகள்

கிடைப்பதைக் கொண்டு, அகழாய்வு செய்யப்பட்ட இடமானது, மனிதர்கள் வாழ்ந்த வசிப்பிட (Habitation sites) பகுதிகளாக இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. மரக்காணம் அகழாய்வில் 2 சில்லுகள், அகழாய்வுக் குழி எண் 5இல் (சிறியவைகள்) மட்டுமே கிடைத்தன. இச்சில்லுகள் இப்பகுதியில் கிடைப்பதால், இப்பகுதியில் மக்கள் இடைக்காலத்தில் வாழ்ந்து வந்ததை அறிய முடிகிறது.

(e) **சதுரங்க காய்** (Games man):

இவைகள் மரக்காணம் அகழாய்வில் அகழாய்வுக் குழி எண் 5ல் இரண்டாம் கால கட்டத்தில் 45செ.மீ ஆழத்தில் கண்டெடுக்கப் பட்டன. இத்தொல்பொருள் இதுவரையில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் கிடைக்கின்றன. தற்போது வீட்டிலேயே (Indoor Game) விளையாடப்படும் சதுரங்கத்தில் (Chess board) பயன்படுத்தப்படும் காய்கள் போன்று அக்காலத்தில் சதுரங்கக் காய்கள் பயன்படுத்தப்பட்டன. மரக்காணம் அகழாய்வில் சிப்பாய் வடிவினில் ஒரு சதுரங்கக் காய் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவை போன்று கோவை மாவட்டம், போளுவாம்பட்டி அகழாய்வில் பல சதுரங்கக் காய்கள் பல்வேறு வடிவங்களில் பெரிய மற்றும் சிறிய அளவுகளில் கிடைத்துள்ளன.

(f) **தாங்கி :** (Ring - on - Stand:)

தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் இவ்வகையான தாங்கிகள் பல கிடைத்துள்ளன. மரக்காணத்தில் நடைபெற்ற அகழாய்வில் குழி எண் 5ல், 5 செ.மீ ஆழத்தில் குழியின் மேல் மட்ட மண்ணில் இரண்டாம் கால கட்டத்திற்குரிய பாள நிலையில் இத்தாங்கி கிடைத்துள்ளது. இக்குழியில் ஒரே ஒரு தாங்கி மட்டுமே கிடைத்தது. கிடைத்த இத்தாங்கியானது சொர சொரப்பான சிவப்பு நிறத்தில் (Coarse Red ware) பானையால் செய்யப்பட்டுள்ளது.

இதன் உயரம் 3 செ.மீ. ஆகும். அகலம், மேல்பகுதியில் 6 செ.மீட்டரும், கீழ்பகுதியில் தாங்கியின் அகலம் 4.5 மீட்டரும் ஆகும். இத்தாங்கியானது பானைகள் அல்லது பாத்திரங்கள் கீழே விழாமலும், அவை சாயாமல் இருக்கவும் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடும். தற்போது பயன்படுத்தப்படும் பிரமனைப் போன்று அக்காலத்தில் இத்தாங்கிகள் பயன்படுத்தப்பட்டன.

(g) **குழிபணியாரச் சட்டி** (Cake oven) :

தமிழகத்தில் இதுவரையில் நடைபெற்ற பல அகழாய்வுக் குழிகளில் சுடுமண்ணால் ஆன சமையல் பாத்திரங்களான, இட்லி பானை மற்றும் தோசை சட்டி போன்றவை கண்டெடுக்கப்பட்டு உள்ளன. மரக்காணம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட இத்தொல்பொருளானது சுடுமண்ணால் ஆன குழிபணியாரச் சட்டியாக இருக்கலாம். இது அமைப்பில் தோசைக் கல்லைப் போன்ற வட்ட வடிவினில் காணப்படுகிறது. உடைந்த இச்சட்டியில் ஆழமற்ற ஒரே ஒரு குழி மட்டுமே காணப்படுகிறது. இக்குழியின் விட்டம் நான்கு செ.மீ ஆகும். இத்தொல்பொருள் கிடைப்பதைக் கொண்டு, இப்பகுதி மக்கள் குழிபணியாரம் செய்து உண்டு வந்ததை அதுவும் சுமார் 400 வருடங்களாகத் தொடர்ந்து உண்டு வருவதை தெளிவாக அறிய முடிகிறது.

(h) **கூரை ஓடு** (Roof tiles) :

மரக்காணம் அகழாய்வில் உடைந்த கூரை ஓடு ஒன்றே ஒன்று மட்டுமே கிடைத்ததுள்ளது. இவை "L" வடிவ கொக்கியின் அமைப்பில் காணப்படுகிறது. இவ்வகையான ஓடுகள் சோழர்காலம் முதல் விசய நகர அரசர்கள் காலம் வரை பயன்பாட்டில் இருந்துள்ளதைப் பல அகழாய்வுகளில் கிடைக்கும்

இவ் ஓடுகளே சான்றுகளாக அமைகின்றன. மேற்படி "L" வடிவ ஓடுகள் இடைக்காலத்தில் கூரை வேய்வதற்குப் பயன்படுத்தப் பட்டவைகளாகும்.

**உலோகப் பொருட்கள் :**

மரக்காணம் அகழாய்வில் கிடைத்த உலோக பொருட்கள் நான்கு ஆகும். இப்பொருட்களில் 2 செப்பு மெட்டி (அ) மோதிரங்கள் மற்றும் செப்பு நாணயங்கள் குறிப்பிடத் தக்கவைகளாகும்.

(a) **இரும்பு :**

மரக்காணம் அகழாய்வில் மொத்தம் நான்கு இரும்புப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கண்டெடுக்கப்பட்ட இரும்புப் பொருட்கள் அனைத்துமே அகழாய்வுக் குழி எண் 5ல் மட்டுமே கிடைக்கின்றன. இவற்றில் இரண்டு ஆணிகளும் (Iron Nails) மற்றவைகள் உடைந்து, அடையாளம் காண இயலாத நிலையில் கிடைத்த இரும்புப் பொருட்கள் ஆகும். மரக்காணம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட இரும்புத் தொல்பொருட்கள் 8% மட்டுமே ஆகும். இங்கு மிக அதிகமான அளவில் இரும்புப் பொருட்கள் கிடைக்காத காரணத்தினால், இங்கு இரும்பின் முக்கியத்துவத்தை அறிய இயலவில்லை.

(b) **மோதிரம் :** மரக்காணம் அகழாய்வில் மூன்று உடைந்த உலோகத் துண்டுகள் கிடைக்கின்றன. இதன் முழு அமைப்பையும் நோக்கும் பொழுது கண்டெடுக்கப்பட்ட இத்தொல்பொருட்கள் மோதிரத்தின் அமைப்பை ஒத்துள்ளன. இத்தொல்பொருளானது அகழாய்வுக் குழி எண் 5ல், 35 செ.மீ ஆழத்தில் இரண்டாம் கால கட்டத்திற்குரிய பாள நிலையிலேயே கிடைக்கின்றன.

**(c) செப்பு நாணயங்கள் :** (Copper Coins)

நாணயங்கள் ஒரு நாட்டின் செல்வ செழிப்பை உணர்த்தும் சான்று என்று சொன்னால் அது மிகையாகாது. பொதுவாக அகழாய்வு செய்யப்பட்ட இடத்தின் காலத்தை கணிப்பதற்கு (Dating object) நாணயங்கள் மிகவும் பயனுள்ள தொல் பொருட்களாகும். மேலும், கண்டெடுக்கப்பட்ட நாணயங்களுடன் பானை ஓடுகளும் கிடைப்பதனால், நாணயத்தின் காலமே, பானை ஓட்டின் காலமாகும் என நிர்ணயம் செய்யலாம். மரக்காணம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட 51 தொல்பொருட்களில் 12 நாணயங்கள் ஆகும், அதாவது மொத்த தொல்பொருட்களில் 24% ஆகும். அதாவது கண்டெடுக்கப்பட்ட மொத்த தொல் பொருட்களில் கால்பகுதி நாணயங்களாகவே இருப்பது, குறிப்பிடத் தக்கதாகும்.

1. தொல்பொருள் : ஆங்கிலேயர் காசு
குழி எண் : MRK - 5
ஆழம் : 5 செ.மீ.
உலோகம் : செம்பு
எடை : 1.78 கிராம்
அளவு : 20.87 மில்லி மீட்டர்
முன்புறம் : ஒரு பைசா
பின்புறம் : இந்தியா 1945
காலம் : ஆங்கிலேயர் காலம்

2. தொல்பொருள் : மராட்டியர் காசு
குழி எண் : MRK - 5
ஆழம் : 5 செ.மீ.
உலோகம் : செம்பு
எடை : 11.15 கிராம்

| | | |
|---|---|---|
| | அளவு | : 19.71 மில்லி மீட்டர் |
| | முன்புறம் | : ஸ்ரீ இராஜ சிவா... |
| | பின்புறம் | : சத்ரபதி |
| | காலம் | : மராட்டியர் காலம் |
| 3. | தொல்பொருள் | : விஜய நகர அரசர் இராமராயர் காசு. |
| | குழி எண் | : MRK - 5 |
| | ஆழம் | : 10 செ.மீ. |
| | உலோகம் | : செம்பு |
| | எடை | : 3.35 கிராம் |
| | அளவு | : 13.96 மில்லி மீட்டர் |
| | முன்புறம் | : வலது புறம் பார்க்கும் காளை |
| | பின்புறம் | : கட்டாரி, சூரியன், சந்திரன் (ரா)ம? ரா (யா)? |
| | காலம் | : விஜயநகர அரசர் இராமராயர் (கி.பி. 1618 – 30) |
| 4. | தொல்பொருள் | : விஜய நகர அரசர் காலம் |
| | ஆழம் | : 30 செ.மீ. |
| | உலோகம் | : செம்பு |
| | எடை | : 3.17 கிராம் |
| | அளவு | : ——— |
| | முன்புறம் | : இடதுபுறம் பார்க்கும் காளை, சூரியன் சந்திரன் |
| | பின்புறம் | : கட்டாரி |
| 5. | தொல்பொருள் | : மிளகாய் விதை காசு |
| | குழி எண் | : MRK - 5 |
| | ஆழம் | : 35 செ.மீ. |
| | உலோகம் | : தங்க முலாம் பூசப்பட்டது |

எடை : 0.38 கிராம்
அளவு : .7.90 மில்லி மீட்டர்
முன்புறம் : 5 புள்ளிகளும் வளைந்த கோடுகளும் உள்ளன.
பின்புறம் : கோடும் அதன் கீழே 12 புள்ளிகள் உள்ளன.

இது மிளகாய் காசு என்றும் வழங்கப்படும்.

6. தொல்பொருள் : விஜயநகர அரசர் இராமராயர் காசு
குழி எண் : MRK - 5
ஆழம் : 45 செ.மீ.
உலோகம் : செம்பு
எடை : 3.58 கிராம்
அளவு : 13.70 மில்லி மீட்டர்
முன்புறம் : இடது புறம் பார்க்கும் காளை
பின்புறம் : கட்டாரி, சூரியன், சந்திரன் (ரா)ம? ரா (யா?)

7. தொல்பொருள் : விஜயநகர அரசர்கள் காலத்திய காசாக இருக்கலாம்
குழி எண் : MRK - 5
ஆழம் : 45 செ.மீ.
உலோகம் : செம்பு
எடை : 2.72 கிராம்
அளவு : 12.70 மில்லி மீட்டர்
முன்புறம் : மிகவும் தேய்ந்துள்ளது
பின்புறம் : மிகவும் தேய்ந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 8. | தொல்பொருள் | : | விஜயநகர அரசர் காசு |
| | குழி எண் | : | MRK - 5 |
| | ஆழம் | : | 45 செ.மீ. |
| | எடை | : | 3.57 கிராம் |
| | அளவு | : | 14.20 மில்லி மீட்டர் |
| | வடிவம் | : | வட்டம் |
| | முன்புறம் | : | இடதுபுறம் நோக்கும் காளை சூரியன், சந்திரன் |
| | பின்புறம் | : | கட்டாரி |
| | எழுத்து | : | ரா(ம) ரா(யா) என எழுதப்பட்டுள்ளது |
| | காலம் | : | (கி.பி. 1618 – 30) |
| 9. | தொல்பொருள் | : | சோழ சிற்றரசர்களின் காசு |
| | குழி எண் | : | MRK - 5 |
| | ஆழம் | : | 55 செ.மீ. |
| | உலோகம் | : | செம்பு |
| | எடை | : | 3.22 கிராம் |
| | வடிவம் | : | வட்டம் |
| | அளவு | : | 13.32 மில்லி மீட்டர் |
| | முன்புறம் | : | இடது புறம் நோக்கியவாறு காளை உருவம் |
| | பின்புறம் | : | நின்ற நிலையில் மனித உருவம். |
| | காலம் | : | கி.பி. 13ஆம் நூற்றாண்டு சோழ அரசர்களின் கீழ் ஆட்சி செய்த சிற்றரசர்கள் வெளியீடு கோப்பெருஞ் சங்கனின் வெளியீடாக இருக்கலாம். |
| 10. | தொல்பொருள் | : | சோழ சிற்றரசர்களின் காசு |
| | குழி எண் | : | MRK - 5 |
| | ஆழம் | : | 55 செ.மீ. |
| | உலோகம் | : | செம்பு |
| | எடை | : | 3.11 கிராம் |
| | அளவு | : | 14.28 மில்லி மீட்டர் |

| | | |
|---|---|---|
| | வடிவம் | : வட்டம் |
| | முன்புறம் | : இடது புறம் நோக்கும் காளை. காளையின் மேல்புறம் சூரியன் உருவம் காணப்படுகிறது. |
| | பின்புறம் | : நின்ற நிலையில் மனிதன் |
| | காலம் | : கி.பி. 13ஆம் நூற்றாண்டு கோப்பெருஞ்சிங்கன்? |
| 11. | தொல்பொருள் | : சோழ சிற்றரசர்கள் |
| | குழி எண் | : MRK - 5 |
| | ஆழம் | : 65 செ.மீ. |
| | உலோகம் | : செம்பு |
| | எடை | : 2.88 கிராம் |
| | வடிவம் | : வட்டம் |
| | அளவு | : 15.15 மில்லி மீட்டர் |
| | முன்புறம் | : வலது புறம் நோக்கும் காளை |
| | பின்புறம் | : நின்ற நிலையில் மனித உருவம் |
| | காலம் | : கி.பி. 13ஆம் நூற்றாண்டு கோப்பெருஞ்சிங்கன்? |
| 12. | தொல்பொருள் | : சோழர்கள் (ஈழக்காசு) |
| | குழி எண் | : MRK - 5 |
| | ஆழம் | : 75 செ.மீ. |
| | உலோகம் | : செம்பு |

| | | |
|---|---|---|
| எடை | : | 3.32 கிராம் |
| அளவு | : | 18.16 மில்லி மீட்டர் |
| வடிவம் | : | வட்டம் |
| முன்புறம் | : | அமர்ந்த நிலையில் மனிதன் |
| பின்புறம் | : | நின்ற நிலையில் மனிதன் |
| எழுத்து | : | தேவநாகரி ராஜராஜா? தெளிவாகத் தெரியவில்லை. |
| காலம் | : | கி.பி. 13ஆம் நூற்றாண்டு மூன்றாம் இராஜராஜன்? |

---

முனைவர் P. சண்முகம், பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக் கழக மேனாள் தலைவர் மற்றும் திருமதி சாந்தி, காப்பாட்சியர், நாணயவியல், அரசு அருங்காட்சியகம் அவர்களது கருத்துக்கள் பெறப்பட்டன.

# 4. காலப் பாகுபாடு (CHRONOLOGY)

மரக்காணம் அகழாய்வில் கண்டெடுக்கப் பட்ட தொல் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு, மரக்காணத்தின் காலத்தை கணிக்க இயலும்.

மேற்படி தொல் பொருட்களைக் கொண்டு மரக்காணத்தில் காலத்தை இரண்டு காலக் கட்டங்களாக (phase) பிரிக்கலாம்.

**முதல் கால கட்டம் : கி.பி. 1000 கி.பி. முதல் 1400 வரை.**

மரக்காணம் அகழாய்வு செய்யப்பட்ட பெரும்பான்மையான குழிகளில் காணப்படும் 3ம் பாள நிலையே இக்காலத்திற் குரியதாகும். இக்காலகட்டத்தில் சோழர் காலத்தைச் சார்ந்த ஈழக்காசு, "L" வடிவ கொக்கி கூரை ஓடுகள் மற்றும் சொர சொரப்பான சிவப்பு நிற பானை ஓடுகள் போன்றவைகளாகும்.

**இரண்டாம் காலகட்டம் கி.பி. 1400 முதல் கி.பி. 1800 வரை**

மரக்காணம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்கள் மற்றும் பானை ஓடுகளை அடிப்படையாகக் கொண்டு, இரண்டாம் கால கட்டத்தை (Second Period) நிர்ணயம் செய்ய முடிகிறது. இக்காலகட்டத்திற்குரியதாக மேல்மட்ட மண் (Humus) முதலாம் மற்றும் இரண்டாம் பாள நிலை (layers) ஆகும். இக்

காலத்திற்குரிய விசய நகர காலத்திய செப்பு நாணயங்களும், பீங்கான் ஓடுகளும் (Porcelain wares) மராட்டியர்களின் செப்பு நாணயங்களும், சுடுமண்ணால் ஆன கெண்டியின் மூக்குப் பகுதிகளும், மூடிகளும், (lids) கால் பகுதிகளும் (leg portion) மற்றும் புகைப்பான்கள் (Smoking pipes) போன்றவைகளாகும். இக்காலக் கட்டத்தில் கிடைக்கும் பானை ஓடுகள் சொர சொரப்பான சிவப்பு நிற ஓடுகள் ஆகும். இப்பானை ஓடுகள் மிகவும் அதிகமாக அளவில் கிடைக்கின்றன.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY. MADRAS- LIBRARY ACC NO 11727 DATE

# 5. பானை ஓடுகள் (POTTERIES)

அகழாய்வில் கிடைக்கும் பானை ஓடுகள் மூலம் ஒரு நாகரிகத்தின் தொன்மையான அக்கால மக்கள் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுத்திய மட்கலன் பற்றி அறியமுடிகின்றது. அகழாய்வில் கிடைத்த பானை ஓடுகளைக் கொண்டும், பானை ஓட்டின் மேல் பொறிக்கப்பட்ட பண்டைய தமிழ் எழுத்துகள் (Brahmi) மற்றும் பானைக் குறியீடுகளைக் (Graffiti marks) கொண்டு, அகழாய்வு செய்யப்பட்ட இடத்தின் காலத்தைக் கணிக்க முடிகின்றது. தமிழகத்தில் வரலாற்றுக்கு முந்தைய காலம் (Early Historic period) மற்றும் வரலாற்றுக் காலத்திலும் (Historical period) தொன்மையான பானை ஓடுகளான;

1. கறுப்பு - சிவப்பு பானை ஓடுகள் (Black -and - Red ware)
2. வழுவழுப்பான சிவப்பு நிற ஓடுகள் (Red slip ware)
3. வழுவழுப்பான கருப்பு நிற ஓடுகள் (Black slip ware) மற்றும்
4. ஆந்திர மட்பானைகள் (Russet coated ware)

இவற்றுடன் உரோமானிய பானை ஓடுகளான

1. ரௌலட்டட் (Rouletted ware) பானை ஓடுகள்.
2. அரிட்டைன் (Arretine) மற்றும்
3. ஆம்பரா (Amphorae Pieces)

மேற்படி பானை ஓடுகளுடன் சொர சொரப்பான பானை ஓடுகள் கீழ்நிலையில் இருந்து (lower level) மேல்மட்டம் வரை கிடைக்கின்றன, அகழாய்வில் கிடைக்கும் பானை ஓடுகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்தில் (Early period) ல் இச் சொர சொரப்பான சிவப்பு நிற பானை ஓடுகள் மிகவும் அருகியும், அதாவது எண்ணிக்கையில் குறைந்தும், பின்பு வரலாற்றுக் காலத்தில் (Late period) சிறிது சிறிதாக உயர்ந்து, கடைசி கட்டத்தில் மிக அதிகமான அளவில் கிடைப்பதை, அகழாய்வுகளின் மூலம் அறிய முடிகிறது. மரக்காணத்தில் நடத்தப்பெற்ற அகழாய்வில் பெரும்பாலும் சொர சொரப்பான சிவப்பு நிற பானை ஓடுகளே கிடைத்துள்ளன.

**சொர சொரப்பான சிவப்பு நிற ஓடுகள் :** (Coarse Red ware)

மரக்காணம் அகழாய்வில் அகழாய்வு செய்யப்பட்ட ஐந்து ஆய்வுக் குழிகளிலும் மேற்படி சொர சொரப்பான பானை ஓடுகள் மட்டுமே கிடைக்கின்றன. இவ் ஓடுகளைக் கொண்டு, இக் காலகட்டத்தில் ஆழமற்ற கிண்ணம் (Shallow dishes) தண்ணீரைச் சேமிக்கும் பாத்திரங்களாகவும் (water vases) தண்ணீரைச் சேமித்து வைக்கும் பாத்திரங்களாக (storage Jar) பயன்பாட்டில் இருந்ததை தெளிவாக அறிய முடிகிறது. இப்பானை ஓடுகளைக் கொண்டு ஆழமற்ற கிண்ணங்களாகவும் (shallowd dishes) மூடிகளும் (lids) ஆழமான மண்டைகளாகவும் (deep bowls) கிடைக்கின்றன. கண்டெடுக்கப்பட்ட மேற்படி சொர சொரப்பான பானை ஓடுகள், பெரும்பாலும் சக்கரத்தால் வனையப்பட்டதாகவும் (wheel turned) வடிவிலும், வழுவழுப்பு இன்றியும் ( unslipped) மிகவும் மங்கிய சிவப்பு நிறத்திலும் சில நன்றாக, சுடப்பட்டும் சில நன்கு சுடப்படாமலும் (Fired and ill fired) கிடைக்கின்றன. இப்பானைகளில் பெரும்பாலும் வாய்புறத்தில் (Rim portion) அழகு செய்யப் பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**வரைபடத்தில் உள்ள பானை ஓடுகளின் விளக்கம் :**

1. கடினமான சிவப்புப் பானை ஓடுகள் (Coarse Redware) வெளிப்பக்கம் நோக்கி அமைந்த விளிம்பு, அகன்ற கழுத்துப் பகுதியும் குவிந்த உடற்பகுதியும், தட்டையான அடிப்பகுதியுடன் கூடிய சட்டியின் உடைந்த பகுதி.

2. வெளிப்பக்கம் நோக்கிச் சற்றே வாயகன்ற பானையின் உடைந்த பகுதி.

3. விளிம்பு வெளிநோக்கியவாறு தட்டையான அடிப்பகுதியைக் கொண்ட ஓட்டின் உடைந்த பகுதி அதன் கழுத்திற்குக் கீழே சற்றே வெளிநோக்கிய விளிம்புப் பகுதி.

4. அகன்ற மெல்லிய உடல் பகுதி, நேரான உடல் அமைப்பு உடைய பானையின் உடைந்த பகுதி.

5. சற்றே தடித்த வெளிநோக்கி அமைந்த குறுகலான கழுத்துப் பகுதி உடைய பானையின் உடைந்த பகுதி.

6. அகன்ற மெல்லிய கழுத்தினை உடைய, சற்றே அகன்ற உடல் அமைப்பு கொண்ட பானை ஓட்டின் உடைந்த பகுதி.


7. அகன்ற விளிம்பு வெளிநோக்கியும், உடல் அகன்ற பகுதியும் கொண்ட பானை ஓட்டின் உடைந்த பகுதி.

8. வாயகன்ற வெளி விளிம்பும், சிறிது உள்நோக்கி வளைந்த உடற்பகுதியும் கொண்ட பானையின் உடைந்த பகுதி.


9. அகன்ற மெல்லிய நேரான உடல் அமைப்பும் சற்றே வளைந்த கழுத்துப் பகுதி உடைய உடைந்த பானை பகுதி.

10. மெல்லிய அகன்ற வாய்ப்பகுதியைக் கொண்ட தட்டையான அடிப்பகுதியுடன் கூடிய சிவப்பு நிறப் பானை ஓட்டின் அடிப்பகுதி.


# பானை ஓடுகளின் வரைபடம்




1




2






4




5




6




7



8



9



10

# 6. முடிவுரை

பண்டைய தமிழக வரலாற்றை அறியவும், அக்கால மக்களின் வாழ்க்கை முறையையும் அறிய தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் கிடைத்த தொல்பொருட்கள் உதவுகின்றன. சென்னையிலிருந்து பாண்டிச்சேரி செல்லும், கிழக்குக் கடற்கரைச் சாலை அருகே அமைந்துள்ள மரக்காணம் கடற்கரையை ஒட்டி யுள்ளதால் இது ஒரு கடற்கரைத் துறைமுகமாக இருந்திருக்கலாம். மேலும், தமிழகத்தின் கிழக்குக் கரையில் மாமல்லபுரம், வசவசமுத்திரம், அரிக்கமேடு, பூம்புகார், தொண்டி, கொற்கை, அழகன் குளம் போன்ற இடங்களில் அகழாய்வுகள் நடைபெற்றுள்ளன. தமிழகத்திற்கும் ரோமானிய நாட்டுக்கும் இடையே நடைபெற்ற வாணிகம் பற்றிய சான்றுகள் மேற்படி ஆய்வுகளில் கிடைத்துள்ளன. எனவே, இதன் அடிப்படையில் மரக்காணத்தில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மரக்காணம் அகழாய்வில் மொத்தம் 51 தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. இவ்வூர் மத்திய கால தமிழகத்தில் ஒரு சிறந்த நகரமாகவும், உப்பளங்கள் நிறைந்த இடமாகவும் திகழ்ந்துள்ளது. அகழாய்வில் கிடைத்த சோழர் காலத்திய காசுகள் 'ட' வடிவில் கூரை ஓடுகள் ஆகியவை இதனை உறுதி செய்கின்றன. மேலும் மத்திய ı பானை ஓடுகளும், சுடுமண் குழாய்களும் கிடைத்துள்ளன. ، இலக்கியமான சிறுபாணாற்றுப் படையில் குறிப்பிட்டுள்ள எயிற்பட்டினம்' மற்றும் பெரிபூளுஸ் குறிப்பிடும் சோபட்மா

ஆகியவை தற்போதைய மரக்காணம் தானா என்பதை அகழாய்வின் மூலம் உறுதிபடுத்த இயலவில்லை ஆயினும், சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவால், பண்டைய மரக்காணம் கடலுக்குள் மறைந்து விட்டதா அல்லது தற்போதைய உப்பளங்கள் ஏற்பட்டதால், பண்டைய நகரம் அழிந்துவிட்டதா? என்ற கேள்விகளுக்குத் தற்போதைய அகழாய்வு மூலம் விடை கிடைக்கவில்லை. ஆயினும், இந்த ஆய்வு முற்றுப் பெறாத ஓர் ஆய்வு, வருங்காலத்தில் இப்பகுதியில் கிடைக்கும் தொல் பொருட்களைக் கொண்டு மரக்காணத்தின் தொன்மைச் சிறப்பினை அறியலாம்.


### மரக்காணம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட
### தொல் பொருட்களின் விவர அட்டவணை எண் – 1


| | பீங்கான் Porcelain | சுடுமண் Terracotta | இரும்பு Iron | நாணயம் Coins | மெட்டி/ மோதிரம் Ring | கண்ணாடி கோலி Glass Ball | பிளாஸ்டிக் மணி Plastic Bead | கருங்கல் Granite Stone | மொத்தம் Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| MRK 1 | 1 | – | – | – | – | – | – | – | 1 |
| MRK 2 | 2 | 4 | – | – | – | – | – | – | 6 |
| MRK 3 | 2 | 9 | – | – | – | – | – | 1 | 10 |
| MRK 4 | – | – | – | – | – | – | – | – | – |
| MRK 5 | – | 14 | 4 | 12 | 2 | 1 | 1 | – | 34 |
| Total | 5 | 27 | 4 | 12 | 2 | 1 | 1 | 1 | 51 |

## கண்டெடுக்கப்பட்ட சுடுமண் பொருட்களின் விவர அட்டவணை எண் - 2


| தொல் பொருட்கள் | MRK 1 | MRK 2 | MRK 3 | MRK 4 | MRK 5 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. சுடுமண் கெண்டிகள் (T.C. Spouts) | --- | 1 | 8 | --- | 5 | 14 |
| 2. சில்லுகள் (Hip - Hops) | --- | --- | --- | --- | 1 | 1 |
| 3. புகைப்பான் (T.C. Smoking Pipes) | --- | --- | --- | --- | 2 | 2 |
| 4. சதுரங்கக் காய் (T.C. Games man) | --- | --- | --- | --- | 1 | 1 |
| 5. கால் பகுதி (T.C. Leg Portion) | --- | 1 | --- | --- | --- | 1 |
| 6. பணியாரச் சட்டி (Cake Oven) | --- | --- | --- | --- | 1 | 1 |
| 7. பானை அடிப்பகுதிகள் (T.C.Pot base) | --- | --- | --- | --- | 2 | 2 |
| 8. மூடி (Lid) | --- | 1 | --- | --- | --- | 1 |
| 9. தாங்கி (Ring on stand) | --- | --- | --- | --- | 1 | 1 |
| 10. அடிப்பான் (Dabber) | --- | 1 | --- | --- | --- | 1 |
| 11. செங்கல் (Brick) | --- | 1 | --- | --- | --- | 1 |
| மொத்தம் | --- | 5 | 8 | --- | 13 | 26 |

# MRK : 5



1.5M
2.0M
4.9M
5.0M
GL
RED MURAM
RED SAND
BROWNISH SAND
SOIL
NS
SOUTHERN SIDE




விழுப்புரம் மாவட்டம்



அகழாய்வுக் குழிகளின் இருப்பிடம் (Contourmap)



பூமிசுவரர் கோவிலின் கருவறைத் தோற்றம் – மரக்காணம்




மனக்கானம் என்ற பெயர் கல்வெட்டில் காணப்படுகிறது.




அகழாய்வு நடைபெற்ற இடத்தின் தோற்றம்.



அகழாய்வு தொடங்கும்முன் வரைபடம் பார்த்து இடம் தேர்ந்தெடுத்தல்



MRK-3 அகழாய்வுக் குழி. (பூமிசுவரர் கோவில் அருகில்)



மத்திய காலப் பானை ஓடுகள்



பனியாரச் சட்டி



சுடுமண் கெண்டியின் மூக்குப் பகுதிகள்




சுடுமண் பானை மூடிகள்



நீர் போகும் குழாய்



மராட்டியர் காசு - ஸ்ரீ இராஜசிவா



விஜயநகர அரசர் - இராமராயர் காசு



மிளகாய் விதைக்காசு



விஜயநகர அரசர் காசு



சோழ சிற்றரசர்களின் காசு



மரக்காணம் அகழாய்வில் கிடைத்த காசுகள்



அகழாய்வில் கிடைத்த செப்பு வளையங்கள்



மரக்காணம் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள் கண்காட்சி
– அறிஞர்கள் பார்வையிடுதல்

# மரக்காணம் அகழாய்வு


## பங்கேற்றோர்

தலைமை :


திரு. **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்** இ.ஆ.ப., சிறப்பு ஆணையர்

*பணி செய்தோர் :*


திரு. **கி. ஸ்ரீதரன்** பதிவு அலுவலர், சென்னை.
திரு. **இரா. செல்வராஜ்** தொல்லியல் அலுவலர், சிதம்பரம்.
திரு. **தி. சுப்ரமணியம்** தொல்லியல் அலுவலர், தஞ்சாவூர்.
திருமதி. **சீ. வசந்தி** அகழாய்வாளர், சென்னை.
திரு. **ஆர். நாராயணன்** இளநிலைப் பொறியாளர், சென்னை.
திரு. **டி. தங்கவேல்** உதவி செயற்பொறியாளர், சென்னை.
திரு. **கோ. ஒளிமாலிக்** இளநிலைப் பொறியாளர், மதுரை.
திரு. **எம். அருண் ஸ்தபதி** சென்னை.
திரு. **மு.த. ஸ்ரீதரன்** நிழற்படம் எடுப்பவர், சென்னை.
திரு. **ஸ்ரீ. ஸ்ரீகுமார்** தொழில்நுட்ப உதவியர், சென்னை.
திரு. **மு.சு. அசோக்தீன்** இரசாயனர், சென்னை.
திரு. **பா. ரவிசங்கர்** உதவி இரசாயனர், சென்னை.
திரு. **நா. பாலகிருஷ்ணன்** உதவி நிழற்படம் எடுப்பவர், சென்னை.




1. The Front Gopura




2. A closer view of the Gopura




3. A section of Gopura in its details




4 The Gopura ; the Prākāra wall
(for which lands were acquired by order of
Jatāvaıman Kulasekhara), and the Garuda Shrine




5. The moulded basement of Adhisthāna



6. The Srivimāna of Rajendra Vinnagar erected by the Chera ruler Rājasimha built around 1021—22 A.D.




A side view of Sri vimāna with details.



8. The Srivimāna in its rear view.



9. The 'Nālāyiravan' Mandapam - now known as Sāthumurai or Tiruvadirai mandapam - and the Dvajasthamba of Sri Kulasekhara shrine




10. The Kulasekhara Ālvār shrine with its Srivimāna built by Sendalangāradāsar



11. Sri Kulasekhara Alvar
installed by Sendalankāradāsar



12. Sri Visvaksena



13. •Sri Veda Nārāyana in a seated pose (*utsava-murti*)



(a) Front view



(b) Rear View

14. Sri Veda Narayana in a standing pose (*utsava-murti*)



(a) Front View



(b) Rear View

15. Sri Bhudevi (*utsava-murti*)



(a) Front View



(b) Rear View

16. Sri Nilādevi (*utsava-murti*)




(a) Front view




(b) Rear view

17. Tiruvāykulattuppillai (Krsna)



(a) Front view



(b) Rear view

18. Sri Rājagopala (*utsava-murti*)



(a) Front View



(b) Rear view


19. Sri Rāma with Laksmana and Sita



20. Sri Āndāl (*utsava-murti*) - Front view



20. Sri Āndāl (*utsava-murti*)
Rear view




21. Sri Garuda (*utsava-murti*)
Rear view




21. Sri Garuda (*utsava-murti*) - Front view




22. The Visvanāthan Koradu (referred to in the inscription of AD 1558) where the *utsava-murtis* are worshipped.



23. The Coppercast Sesa Vāhana




24. The Dvārapālakas



. A sculpture of Sri Rāma in the Manavālamāmuni shrine



26. Portrait Sculpture of a Nāyak ruler




27. A portrait sculpture of a benefactor and his consort




28 Another portrait sculpture of a benefactor and attendant



29. Teppakkulam built by Cinna Nagu Nayakkar



30. A side view of the gopura and the Pandal and the Utsava mandapams



31. The front view of the Temple and the Gopura